**“சில்பாலோக்க வேலைத்திட்டம்”**

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# கணக்கீடு

## தரம் - 12



**சுயகற்றலுக்கான கையேடு**

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***வழிகாட்டல்***

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***நூலாக்கம் & கணிணி வடிவமைப்பு***
***K.பிரபாகர் -*** *SLPS*
மமா/அ/சென்மேரிஸ் கல்லூரி, பொகவந்தலாவ.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

# பொருளடக்கம்

| தேர்ச்சி இல | தேர்ச்சிகள் | பக்கம் |
|---|---|---|
| 01 | கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் பகுப்பாய்வு செய்வார். | 6 |
| 02 | வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார். | 8 |
| 03 | இரட்டைப்பதிவு முறைக்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்வார் | 17 |
| 04 | முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளில் பதிவு செய்வார் | 19 |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

**தேர்ச்சி – 01 கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் பகுப்பாய்வு செய்வார்.**

## கணக்கீடு வரைவிலக்கணங்கள்

அமெரிக்க கணக்கீட்டுச் சங்கம் ( American Accounting Association)
தகவல்கள் தேவைப்படும் பிரிவினர்கள் தீர்மானங்களை / முடிவுகளை எடுப்பதற்கு ஏற்றவாறு பொருளாதார தகவல்களை இனங்காணுதல், அளவீடு செய்தல், தொடர்பாடல் செய்யும் செயன்முறையே கணக்கீடாகும்.

**அமெரிக்க சான்றுப்படுத்திய பொதுக் கணக்காளர் நிறுவனம் ( American Institute of Certified Public Accountants)**
நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் என்பவற்றை விசேட முறையில் பணமெனும் சாதனத்தைப் பயன்படுத்தி பதிவு செய்வது, வகைப்படுத்துவது, பொழிப்பாக்குவது, பகுப்பாய்வு செய்வது, தொடர்பாடல் செய்வது அச்செயற்பாட்டினால் எழுந்த பெறுபேறுகளை வியாக்கியானம் கூறுவதுமான கலை கணக்கீடு ஆகும்.

## கணக்கீடு பொதுவான வரைவிலக்கணம்

அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு கணக்கீட்டு அலகொன்றுக்குரிய பொருளாதார தகவல்களை வழங்கும் முழுமையான செயன்முறையே கணக்கீடு ஆகும்.

## நிதிக்கணக்கீட்டின் நோக்கம்

நிறுவனம் பற்றிய தகவலினை நிறுவனத்தின் வெளிவாரியான அக்கறையுடையோர் மற்றும் முகாமையாளர்கள் தீர்மானம் எடுக்க வழங்குதல்

## முகாமைக்கணக்கீட்டின் நோக்கம்

நிறுவனம் பற்றிய தகவலினை நிறுவன முகாமை தீர்மானம் எடுக்க வழங்குதல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கணக்கீட்டில் அக்கறை செலுத்தும் பிரிவினரும் அவர்கள் அக்கறை செலுத்தக் காரணங்களும்

| அக்கறை செலுத்தும் பிரிவினர் | அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்குத் தேவையான தகவல் |
|---|---|
| 01. உரிமையாளர் / உரிமையாளர்கள் | • முதலீட்டுக்கு ஏற்ற / திருப்திகரமான அனுகூலம் கிடைக்கப்பெற்றுள்ளதா?<br>• மேலும் முதலீடு செய்யப்பட வேண்டுமா? |
| 02. முகாமையாளர்கள் | • திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?<br>• எதிர்கால அபிவிருத்திக்கு எடுக்க வேண்டிய தீர்மானங்கள் / திட்டங்கள் எவை? |
| 03. ஊழியர்கள் | • தொழில் பாதுகாப்பு காணப்படுகின்றதா?<br>• சம்பளத்தை அதிகரிக்கக் கூடிய இயலுமை நிறுவனத்திற்கு காணப்படுகின்றதா? |
| 04. அரச நிறுவனம் உதாரணம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | • உரியவாறு வரிகள் செலுத்தப்படுகின்றதா?<br>• தேவையான அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றனவா? |
| 05. வாடிக்கையாளர்கள் | • நியாயமான விலையில் தரமான உற்பத்திகள் விநியோகம் செய்யப்படுகின்றனவா?<br>• பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கான சிறந்த நிலைப்பாடு வணிகத்திற்குள்ளதா? |
| 06. கடன்கொடுத்தோரும் கடன் வழங்கும் நிறுவனங்களும் | • வழங்கபட்ட கடனை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமா?<br>• மேலும் கடனைச் செலுத்துவதற்கு நிறுவனம் இயலுமை உடையதா? |

## வேறுபாடு

| அடிப்படை | நிதிக்கணக்கீடு | முகாமைக்கணக்கீடு |
|---|---|---|
| 1. தகவலை பயன்படுத்தும் தரப்பினர் | 1. உள்ளக வெளியக கட்சியினர் | 1. உள்வாரியான முகாமையாளர் |
| 2. கவனத்தில் கொள்ளும் காலம் | 2. கடந்த அல்லது வரலாற்றுக் காலம் | 2. வரலாற்றுக் காலத்தைக் கொண்டு எதிர்காலம் |
| 3. சட்டக்கட்டுப்பாடு | 3. சட்டபூர்வமானது. | 3. சட்டபூர்வத்தன்மை அற்றது |
| 4. தகவலின் தன்மை | 4. பணத்தினால் மதிப்பிடப்பட்டது. | 4. பணத்தினால் மதிப்பிடப்படாதது |
| 5. அறிக்கையிடல் தடவை | 5. வருடத்திற்கு ஒரு தடவை | 5. தேவைக்கேற்ப |

| முகாமைக்கணக்கீடு | நிதிக்கணக்கீடு |
|---|---|
| 1. நிறுவன முகாமை தீர்மானம் எடுக்க தகவல் வழங்கும் | 1. நிறுவனத்தின் அக்கறையுடைய தரப்பினருக்கு தகவல் வழங்கும் |
| 2. கடந்த காலத்தினைக் கொண்டு எதிர்வு கூறிய தகவலை வழங்கும் | 2. கடந்தகால அல்லது வரலாற்றுத்தகவலினை வழங்கக் கூடியது. |
| 3. சட்டரீதியான கட்டுப்பாடற்றது | 3. நியமங்களில் விபரிக்கப்பட்ட தகவலினை வழங்கக் கூடியது. |
| 4. தேவைக்கேற்ப அறிக்கையினை வழங்கக் கூடியது. | 4. இது உண்மையான அல்லது சரியான தகவலினை வழங்கக் கூடியது. |
| 5. பணத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டதும் மதிப்பீடு செய்யப்படாததுமான தகவல் | 5. வருடத்திற்கொரு தடவை அறிக்கையினை வழங்கக் கூடியது. |
| | 6. பணத்தினால் மதிப்பிடப்பட்ட தகவல் |

## கணக்கீட்டு சூழல்

வணிகமொன்றின் கணக்கீட்டுச் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் கணக்கீட்டுச் சூழலாகும்.

## கணக்கீட்டு சூழல் காரணிகள்

| சூழல் காரணிகள் | மாறிகள் |
|---|---|
| 1. பொருளாதார அரசியல் சூழல் காரணி | 1. வரிக்கொள்கை, நாணயமாற்று வீதம், விலைமட்டம், அரசகொள்கைகள், சந்தை நிலைமை |
| 2. நுட்ப மற்றும் தொழில்சார் சூழல் காரணி | 2. கணக்கீட்டு நியமம், கணக்கீட்டு நுட்பமுறை, கணக்கீட்டு தொழில்சார் நிறுவனங்கள் |
| 3. சட்டச் சூழல் காரணி | 3. 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச்சட்டம், 1890ம் ஆண்டின் பங்குடமை கட்டளைச்சட்டம், 1995ம் ஆண்டின் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம் |
| 4. சமூக கலாசார சூழல் காரணி | 4. மனப்பாங்கு, பழக்கவழக்கம், நம்பிக்கை, குடித்தொகை பரம்பல், தனிநபர் வாழ்க்கைப் போக்கு. |
| 5. தொழில்நுட்ப சூழல் காரணி | 5. கணனித்தொழில்நுட்பம், நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்பாடு, தொடர்பாடல் தொழில்நுட்பம். |

## கணக்கீட்டுச் செயன்முறை

**கணக்கீட்டுச் செயன்முறைகளின் படிமுறைகள்**

01. வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளின் பெறுமானத்தை ''பணம்'' எனும் சாதனத்தினால் அளவிடுதல்.
02. மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மூல ஏடுகளில் பதிவு செய்தல்.
03. மூல ஏடுகளில் உள்ளடக்கப்பட்டவற்றை பேரேடுகளுக்கு மாற்றம் செய்தல்.
04. பேரேட்டுக் கணக்குகளை சமப்படுத்தி பரீட்சை மீதியினைத் தயாரித்தல்.
05. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

**கணக்கீட்டு உள்ளீடுகள்**

- கணக்கீட்டுச் செயன்முறையினால் உள்வாங்கப்படும் தகவல்களே கணக்கீட்டு உள்ளீடுகள் எனப்படும்.
- கணக்கீட்டு உள்ளீடுகள் இரு வகைப்படும்.
  1. கொடுக்கல் வாங்கல்கள்
  2. நிகழ்வுகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

**கணக்கீட்டு வெளியீடு**
பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவாறு கணக்கீட்டுச் செயன்முறையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களே கணக்கீட்டு வெளியீடுகள் எனப்படும்.
உதாரணம் - முற்றும் அடங்கிய வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமையாண்மை மாற்றல் கூற்று

**தேர்ச்சி – 02 வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.**

**கணக்கீட்டுச் சமன்பாடு**
நிறுவனம் ஒன்றின் வளங்களுக்கும் (சொத்துக்களுக்கும்) அந்த வளங்களின் மீது உரிமை கொண்டுள்ள உரிமையாளர்களுக்கும் இடையிலான தொடர்பினை கணித ரீதியிலான சமன்பாடாக விபரிப்பது கணக்கீட்டுச் சமன்பாடு ஆகும்.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

**நிதியறிக்கைகளின் மூலகங்கள் / கணக்கீட்டு மூலகங்கள்**
01. சொத்துக்கள்
02. பொறுப்புக்கள்
03. உரிமையாண்மை
04. வருமானம்
05. செலவு

**சொத்துக்கள்**
கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக தோற்றம் பெற்றிருப்பதும், எதிர்கால பொருளாதார நலனொன்று உட்பாய்ச்சப்படுவதும் வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதுமான வளங்கள் சொத்துக்கள் எனப்படும்.

பின்வரும் மூன்று நிபந்தனைகள் இருந்தால் மாத்திரமே சொத்துக்களை இணங்கண்டு (ஏற்புசைவு செய்து) புத்தங்களில் காட்டுவதற்கு முடியும்.
01. எதிர்காலத்தில் நிறுவனத்திற்கு பொருளாதார நலன்களை உட்பாய்ச்சக் கூடியதான நிபந்தனையைக் கொண்டிருத்தல்.
02. சொத்தின் கிரயத்தினை நம்பகரமாக அளவிடக்கூடியதாகவிருத்தல்.
03. நிறுவனத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.

| **சொத்துக்களை வகைப்படுத்துதல்** | |
|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள் (Current Assets)** | **நடைமுறையல்லாச் சொத்துக்கள் ( Non-Current Assets)** |
| **உதாரணம்** | **உதாரணம்** |
| வியாபார வருமதியாளர் | காணி கட்டிடம் |
| இருப்பு | தளபாடம் |
| முற்பண செலவினம் | மோட்டார் வாகனம் |
| பெறவேண்டிய வருமானம் | கனிணிகள் |
| காசு மீதி | இயந்திரங்கள் |

**பொறுப்புக்கள்**

கடந்தகால கொடுக்கல் வாங்கலின் விளைவாக தோற்றம் பெற்றிருக்குமொன்றை தீர்ப்பனவு செய்யும் பொழுது வளங்கள் வெளிச்செல்லக்கூடிய நிகழ்கால கடப்பாடுகள் பொறுப்பு எனப்படும்.

**பொறுப்புக்களை கணக்குப் புத்தங்களில் பதிவு செய்வதற்கு அது பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**
01. தற்போதைய (நிகழ்கால) கடப்பாடாக இருத்தல் வேண்டும்.
02. கடப்பாட்டினை தீர்வு செய்வதற்கான பொருளாதார வெளிப்பாய்ச்சல்கள் ஏற்படுவதற்கான சாத்தியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. இந்த வெளிப்பாய்ச்சலினை நம்பகரமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

| பொறுப்புக்களை வகைப்படுத்துதல் | |
|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள் ( Current Liabilities)** | **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் ( Non-Current Liabilities)** |
| **உதாரணம்** | **உதாரணம்** |
| வியாபர சென்மதியாளர்கள் | வங்கிக் கடன் |
| அட்டுறு செலவினங்கள் | ஈட்டுக் கடன் |
| முற்பண வருமானங்கள் | தொகுதிக் கடன் |
| வங்கி மேலதிகப்பற்று | குத்தகைப் பொறுப்பு |
| குறுங்காலக் கடன் (1 வருடத்திற்கு உட்பட்டது) | |

**உரிமையாண்மை**

வணிகத்தின் உரிமையாளரால் வணிகத்திற்கு ஈடுபடுத்தப்படும் வளங்கள் மூலதனம் எனக் கருதப்படுவதுடன் இது வணிகத்தின் உரிமையாண்மை எனப்படும்.

**வருமானங்கள்**

குறித்த நிதியாண்டில் வணிகத்தில் காசு உட்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதியை அதிகரிக்கக் கூடிய அல்லது பொறுப்புக்களைக் குறைக்கக் கூடிய தன்மையைக் கொண்ட, உரிமையாளரின் பங்களிப்பு இன்றி உரிமை அதிகரிப்புக்கு காரணமாக அமையும் பொருளாதார நன்மைகள் அதிகரித்தல் வருமானங்கள் எனப்படும்.

**செலவினம்**

வணிகமொன்று செயற்பாட்டுக் கருமங்களை நடாத்திச் செல்லும்போது பல்வேறு வகையான செலவுகளை ஏற்கவேண்டியுள்ளன. அவ்வகையில் நிதியாண்டில் வணிகத்திலிருந்து காசு வெளிப்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல் அலலது பொறுப்பினை அதிகரிக்கக் கூடிய தன்மையுடைய, உரிமையாளருக்கு மேற்கொள்ளப்படுகின்ற வளங்கள் தவிர்ந்த உரிமை குறைவடைவதற்கு காரணமான பொருளாதார நன்மைகள் குறைவடைதல் செலவினம் எனப்படும்.

**உரிமையாண்மையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்**

01. மேலதிக மூலதனமிடல்
02. வருமானங்கள்

**உரிமையாண்மையில் குறைவினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்**

01. பற்று
02. செலவினங்கள்

இலாபம்/நட்டம் = இறுதி தேறியசொத்து – ஆரம்ப தேறியசொத்து + பற்று – மேலதிகமூலதனம்

Profit/Loss = CNA – ONA + D - AC

01. லாவன்யா வணிகத்தின் 2017 ஒக்டோபர் மாத கொடுக்கல் வாங்கல்களின் சமன்பாடுகள்

| மீதி, கொடுக்கல் வாங்கல்கள் | *சொத்துக்கள்* | | | | *பொறுப்புக்கள்* | | *உரிமை யாண்மை* |
|---|---|---|---|---|---|---|---|
| | *ஆதனம், பொறி உபகரணம்* | *வியாபார இருப்பு* | *வியாபர வருமதி* | *காசு* | *வங்கிக் கடன்* | *வியாபர கொடுக்குமதி* | |
| 1.10.2017 | 1600 | 600 | 600 | 500 | 700 | 400 | 2200 |
| 1 | | | | +600 | | | +600 |
| 2 | | +200 | | | | +200 | |
| 3 | +900 | | | -400 | +500 | | |
| 4 | | | -100 | | | -100 | |
| 5 | | -800 | +1200 | | | | +400 |
| 6 | | | | -150 | | +50 | -200 |
| 7 | | +80 | -120 | | | | -40 |
| 8 | | | | -175 | | -200 | +25 |
| 9 | -25 | | | | | | -25 |
| 10 | | | | -120 | -100 | | -20 |
| **31.10.2017 மீதி** | **2475** | **80** | **1580** | **255** | **1100** | **350** | **2940** |

உரிமையாண்மையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களுள் இல 1இனைத் தவிர ஏனையவை இலாபத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**வேண்டப்படுவது**

1. இல 1 - 10 கொடுக்கல் வாங்கல்களை பெறுமதிகளுடன் விபரிக்க
2. 31.10.2017இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று
3. சொத்து மற்றும் பொறுப்புக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது எனக் காட்டக்கூடியவாறு 31.10.2017இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

**02.** நிமலன் நிறுவனத்தின் 2019.5.31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வரும் சமன்பாட்டில் தரப்பட்டுள்ளளது.

| இல | பொறி | இருப்பு | வியாபார வருமதி | காசு | மூலதனம் | கடன் | வியாபார சென்மதி | நிறுத்தி வைத்த இலாபம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 250000 | 60000 | 40000 | 100000 | 300000 | 50000 | 40000 | 60000 |
| 1 | | -12000 | +25000 | | | | | +13000 |
| 2 | | | -10000 | +9000 | | | | -1000 |
| 3 | | +3000 | -4000 | | | | | -1000 |
| 4 | | | -2500 | | | | | -2500 |
| 5 | +100000 | | | | | +100000 | | |
| 6 | | -8000 | | -1000 | -9000 | | | |
| 7 | | | | | +5000 | | -6000 | +1000 |
| 8 | | | | -5000 | | -4000 | | -1000 |
| 9 | | -3000 | | | | | | -3000 |
| 10 | | | | | | +20000 | -20000 | |

வேண்டப்படுவது :-

01 1 முதல் 10 கொடுக்கல் வாங்கல்களையும் விபரிக்குக.
02 சமன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தேறியலாபத்தை கணிக்குக.

**03**. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது சிவன் சில்லறை வணிகம் ஒன்றில் 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்றவை ஆகும். இது கணக்கீட்டுச் சமன்பாட்டின் ஊடாக தரப்படுகின்றது.

(ரூபா 000).

| இல | மோட்டார் | கணிணி | நடைமுறைச் சொத்து | | | வியாபார கொடுக்குமதி | வங்கிக் கடன் | மூலதனம் | நிறுத்திவைத்த வருமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சரக்கிருப்பு | வியாபார வருமதியாளர் | காசு | | | | |
| மீதி | +1000 | +500 | +300 | +400 | +350 | +350 | +200 | +1500 | +500 |
| 1 | | | +200 | | | +200 | | | |
| 2 | | | -100 | +150 | | | | | +50 |
| 3 | | | | | -60 | | -50 | | -10 |
| 4 | -30 | | | | | | | | -30 |
| 5 | | | | | +80 | | | | +80 |
| 6 | | | | | -30 | -35 | | | +5 |
| 7 | | | | -3 | | | | | -3 |
| 8 | | | -10 | | | | | | -10 |
| 9 | | | -120 | | +200 | | | | +80 |
| 10 | | | -50 | | | | | | -50 |
| 11 | | -50 | | | | | | | -50 |
| 12 | | | +10 | -15 | | | | | -5 |
| 13 | | | | -20 | | -20 | | | |
| 14 | | | | | | -15 | | | -15 |
| 15 | | | | | -20 | +5 | | | -25 |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

குறிப்பு:- மோட்டார் வான் தேறிய பெறுமதியில் பேணப்படுகின்றது அத்துடன் கணிணிக்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை

வேண்டப்படுவது

1. 1-15 வரையான கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குக.
2. 2019 ஜனவரி மாதத்திற்கான வருமானக்கூற்று.
3. 31.01.2019 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

04. ராஜன் என்பவர் 1.4.2018 இல் வியாபாரமொன்றை தொடங்கினார் 31.3.2019 இல் உள்ளவாறான வியாபாரத்தின் வரைபு நிதிக்கூற்றுக்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு.

| | ரூ 000 |
|---|---|
| ஆதனம்பொறி உபகரணம் - கிரயத்தில்……………… | 6000 |
| இருப்பு (ஏட்டுப்பதிவுகளின்படி) ………………… | 400 |
| வியாபாரவருமதி ……………………………………… | 2000 |
| முற்செலுத்திய வாடகை …………………………….. | 200 |
| காசுமீதி ……………………………………………… | 2000 |
| வியாபாரகொடுக்குமதி ………………………………… | 2000 |
| அட்டுறுச் செலவு ……………………………………… | 150 |
| முற்பணமாகப் பெற்றவை …………………………… | 250 |
| 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் … | 3000 |
| 1.4.2018 இல் மூலதனம் …………………………… | 5200 |

வியாபாரத்தின் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கினுடாக செய்யப்படுகின்றன.

31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

01 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத்தேய்வு ரூ 200000

02 2019 மார்ச் மாதத்திற்கான காட்சியறை வாடகை ரூ 150000 ஆனது முற்செலுத்திய வாடகைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03 2019 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டனம் ரூ50000 ஆனது 31.3.2019வரை செலுத்தப்படவோ, கணக்கில் பதியப்படவோ இல்லை.

04 30.3.2019 இல் ரூ 100000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டபொருட்கள் கணக்குப்புத்தகங்களில் பதியப்படவில்லை

05 30.3.2019 இல் ரூ 200000 கிரயமானபொருட்கள் ரூ 400000 காசுக்கு விற்பனைசெய்யப்பட்டமை தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் பதியப்படவில்லை.

06 இவ்வருடத்தில் ரூ 50000 கிரயமான இருப்பு உருப்படிகள் அழிவடைந்துள்ளதுடன் இவ்வுருப்படிகள் விற்பனை செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை எனினும் இவ்வுருப்படிகள் 31.3.2019 இல் உள்ள இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றின் தேறக்கூடிய பெறுமதி ஒன்றும் காணப்படவில்லை.

07 28.3.2019 இல் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற ரூ 20000 காசோலையொன்று 31.3.2019 இல் வங்கியால் மறுக்கப்பட்டமையை 03.4.2019 இல் பெறப்பட்ட வங்கிக்கூற்று வெளிப்படுத்தியுள்ளது. இதுபற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.

08 மேலும் 31.3.2019 இல் வங்கியில் கடன்பட்டோர் ஒருவரினால் நேரடியாக ரூ 30000 காசோலை ஒன்று வைப்புச் செய்யப்பட்டதையும். இத்தொகையானது வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது மீளப்பெறமுடியாத தொகையாக பதியப்பட்டது.

09 வியாபாரத்தினால் உடமையாளரின் பிள்ளைக்கு பரீட்சைக் கட்டணமாக செலுத்திய ரூ 5000ஐ வங்கிக்கூற்று வெளிப்படுத்துகின்றது.

வேண்டப்படுவது

ஆரம்ப, இறுதி மீதிகள் உட்பட கீழ்வரும் சமன்பாட்டில் பதிவுசெய்து காட்டுக

01 ஆ.பொ.உ + இருப்பு + வியாபார வருமதி + ஏனைய வருமதி + காசு = மூலதனம் + நிறுத்திவைத்த இலாபம் + வியாபார சென்மதி + ஏனைய சென்மதி

02 31.3.2019 இல் முடிவடைந்த காலத்திற்கான திருத்திய இலாபம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

**சரியான விடையின் இலக்கத்தினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. நிதிக்கணக்கீட்டின் முதன்மை நோக்கமாக அமைவது யாது?
   i. அக்கறையுடைய தரப்பினர் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குதல்.
   ii. கொடுக்கல் வாங்கல்களை நிதிக்கூற்றுக்களில் முறையாக பதிவுசெய்தல்.
   iii. நிதியறிக்கைகளை தயாரித்தல்
   iv. தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை முகாமையாளர்களுக்கு வழங்குதல்.
   v. நிறுவனத்தின் மீது அக்கறை கொண்ட வெளிவாரி அக்கறையுடையோர் தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல் வழங்குதல். (……)

2. நிறுவனமொன்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு தகவலொன்று பின்வருமாறு தரப்படுகிறது.
   ''நிறுவனமொன்றினால் உற்பத்திச் செய்யப்படும் பொருளுக்கான கிரயம்''
   மேற்படி தகவலில் அதிகூடிய அக்கறை கொண்டவர் யார்?
   i. முதலீட்டாளர்கள்
   ii. கடன் வழங்குனர்
   iii. வழங்குனர்கள்
   iv. முகாமையாளர்கள்
   v. அரசாங்கம் (……)

3. வணிகமொன்றின் 31.03.2018ல் முடிவுற்ற ஆண்டுக்கான கட்டிட வாடகை ரூ.24000 இதில் ¾ பங்கு கணக்காண்டில் காசாக செலுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கமாக அமைவது?
   i. சொத்துக்களில் குறைவும், உரிமையாண்மையில் குறைவும்
   ii. சொத்துக்களில் குறைவும், பொறுப்புக்களில் அதிகரிப்பும், மூலதனத்தில் குறைவும்
   iii. சொத்துக்களில் குறைவும், பொறுப்புக்களில் அதிகரிப்பும்
   iv. சொத்துக்களில் குறைவும், பொறுப்புக்களில் குறைவும், உரிமையாண்மையில் குறைவும்
   v. சொத்துக்களில் குறைவும், பொறுப்புக்களில் அதிகரிப்பும், நிறுத்தி வைத்த வருவாயில் குறைவும் (……)

4. பின்வரும் பண்புகளில் முகாமை கணக்கீட்டிற்கு உரித்தற்ற பண்பு யாது?
   i. முகாமைக்கு தேவையான சந்தர்ப்பங்களின் போது தகவல்கள் முன்வைக்கப்படும்.
   ii. உள்வாரி அக்கறையுடையோருக்கு மாத்திரம் தகவல் வழங்கப்படல்
   iii. வரலாற்று மற்றும் மதிப்பீட்டு தகவல்கள் பயன்படுத்தப்படும்
   iv. கணக்கீட்டு சட்டதிட்டங்கள் நியமங்களுக்கு உரியது.
   v. உள்ளக மற்றும் வெளியக பிரிவினர்களுக்கு தகவல்கள் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டிருப்பதில்லை. (……)

5. நிதிக்கணக்கீட்டின் செயன்முறையினை சரியாக காட்டும் ஒழுங்கு வரிசை யாது?
   i. பதிவுசெய்தல், இனங்காணலும் அளவிடுதலும், வகைப்படுத்தல், பொழிப்பாக்கல், பகுப்பாய்வு செய்தல்
   ii. இனங்காணலும் அளவிடுதலும், பதிவுசெய்தல், வகைப்படுத்தல், பொழிப்பாக்கல், பகுப்பாய்வு செய்தல்
   iii. இனங்காணலும் அளவிடுதலும், வகைப்படுத்தல், பதிவுசெய்தல், பொழிப்பாக்கல், பகுர்பாய்வு செய்தல்
   iv. பதிவுசெய்தல், இனங்காணலும் அளவிடுதலும், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், பொழிப்பாக்கல்
   v. இனங்காணலும் அளவிடுதலும், பதிவுசெய்தல், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், பொழிப்பாக்கல் (……)

6. ''பல்வேறு தேய்வு முறைகளில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்துவதன் காரணமாக வணிகங்களின் கணக்கீட்டுத் தகவல்களின் ஒரே தன்மை பாதுகாக்கப்படுவதனூடாக ஒப்பிடுதல் தரப்பண்பு உயர்வடையும்'' இக்கூற்றுக்கு பொருந்தும் கணக்கீட்டு சூழற் காரணியானது,

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

i. சட்டச்சூழல்
ii. சமூக கலாச்சார சூழல்
iii. நுட்பம் மற்றும் தொழில்சார் சூழல்
iv. தொழிநுட்பச்சூழல்
v. பொருளாதார அரசியல் சூழல் (……)

7. இரு பிரிவினரிடையே பரிமாற்றமொன்று இடம்பெறாவிடினும் வணிகத்தின் சொத்து, பொறுப்பு, உரிமை என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டு உள்ளீடான நிகழ்வுகளாக அமையாதது?
i. பெறுமானத்தேய்வு
ii. கடன் விற்பனை
iii. இருப்பு அழிவு நட்டம்
iv. விபத்தொன்றால் மோட்டார் வாகனம் அழிவடைதல்
v. இருப்பு களவு நட்டம் (……)

8. பின்வருவனவற்றுள் கணக்கீட்டு வெளியீடொன்றாக கருதப்பட முடியாதது?
i. வருமானக்கூற்று
ii. நிதிநிலைமைக்கூற்று
iii. வங்கிக்கூற்று
iv. கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புக்களும்
v. காசுப்பாய்ச்சல் கூற்று (……)

9. பின்வருவனவற்றுள் சொத்தொன்றின் பண்பொன்றாக கருத முடியாதது?
i. கடந்தகால கொடுக்கல் வாங்கலொன்றின் விளைவால் உருவானது.
ii. எதிர்கால பொருளாதார நலனை பெற்றுத்தரக்கூடியது
iii. தொட்டுணரக்கூடிய தன்மை கொண்டது.
iv. நிறுவனத்தின் கட்டுபாட்டில் உள்ள வளம்.
v. நம்பகரமான முறையில் பெறுமதி மதிப்பிடக்கூடியது. (……)

10. சொத்துக் குறைவடைந்து பொறுப்பொன்றிலும் குறைவடைவதற்கான காரணமாக அமையும் கொடுக்கல் வாங்கலாக அமைவது?
i. வியாபார வருமதியாளரிடம் பெற்ற காசு
ii. வியாபார கொடுமதியாளருக்கு உரிமையாளர் சொந்த பணத்தில் கொடுப்பனவு செய்தார்.
iii. செலுத்திய வங்கிக்கடன் வட்டி
iv. கடந்த மாதத்திற்குரிய மின்கட்டணம் இம்மாதம் செலுத்தப்பட்டது
v. களஞ்சியத்தில் உள்ள இருப்புக்களில் ஒரு பகுதி அழிவுற்றது. (……)

11. சிவா என்பவர் “பண்டாரவளை டிரேடர்ஸ்” எனும் வியாபாரத்தை 2018.01.01இல் ஆரம்பித்தார். முதலாம் வாரம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்களில் ஒரு கொடுக்கல் வாங்களின் விளைவை பின்வரும் கணக்கீட்டு
சமன்பாடு பிரதிபலிக்கிறது. சொத்து **=** பொறுப்பு **+** உரிமையாண்மை

-100000 = -120000 + 20000

மேற்குறிப்பிட்ட விளைவிற்கு பொருந்தக்கூடிய கொடுக்கல்வாங்கள்
i. ரூ.100000 கிரயமான இருப்புக்கள் அழிவடைந்ததுடன் அதில் ரூ.20000 ஐ காப்பறுதி கம்பனி இழப்பீடு பெற்றுத்தர ஒப்புக்கொண்டது.
ii. ரூ.120000 வியாபார சென்மதியொன்று ரூ 100000 கொடுத்து தீர்க்கப்பட்டது.
iii. இம்மாத செயற்பாட்டு செலவு ரூ.100000 இதில் ரூ80000 காசாக செலுத்தப்பட்டதுடன் ரூ.20000 அட்டுறுவாகும்.
iv. இம்மாத செயற்பாட்டு செலவு ரூ.120000 என்பதுடன் இதில் ரூ.100 000 காசாக செலுத்தப்பட்டது
v. இம்மாத செயற்பாட்டு செலவு ரூ.100000 இது முழுமையாக தீர்க்கப்பட்டது. (……)



மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

12. பின்வருவனவற்றுள் பிழையான இரட்டை விளைவாக அமைவது?
   i. சொத்தொன்று குறைவடைந்து மற்றோர் சொத்து அதிகரிக்கும்
   ii. பொறுப்பு அதிகரித்து உரிமை குறைவடையும்
   iii. பொறுப்பு குறைவடைந்து உரிமை குறைதல்
   iv. பொறுப்பு குறைவடைந்து மற்றொரு பொறுப்பு அதிகரிக்கும்
   v. சொத்து குறைவடைந்து உரிமை குறைவடையும் (……)

13. " கெமிகெதர" எனும் உணவகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் தரப்படுகிறது. இதில் உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை தெரிவு செய்க
   A. உணவு பொருட்கள் கடன் கொள்வனவு ரூ.50 000
   B. உரிமையாளருக்கு சொந்தமான மோட்டார் வாகனம் ரூ.500 000 வணிகத்தில் முதலீடு செய்தல்.
   C. வணிகத்திற்கு ரூ.50 000 கிரயமான தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டன.
   D. உரிமையாளரின் வீட்டு வாடகைக்கு வணிகத்திலிருந்து கொடுத்த காசு ரூ.25 000
   E. இம்மாத மின்பட்டியல் ரூ.3000 கிடைக்கப்பெற்றது.
   i. A,B,D    ii. B,D,E    iii. B,C,D    iv. B,D    v. A,B,E (……)

14. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பதற்காக வருமானங்களுடன் அவற்றை ஈட்டுவதற்காக மேற்கொண்ட செலவுகளை தொடர்புபடுத்த வேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு பின்வருவனவற்றுள் எது?
   i. இணைத்தல்
   ii. கால அளவு
   iii. அலகுசார்
   iv. பணஅளவீடு
   v. அட்டுறு (……)

15. ரொசான் என்பவரின் வணிகத்திலிருந்து பின்வரும் தகவல் பெறப்பட்டது.

| | 31.03.2018ல் (ரூ.000) | 31.03.2017ல் (ரூ.000) |
|---|---|---|
| சொத்துக்கள் | 3500 | ………? |
| பொறுப்புக்கள் | 1000 | 600 |

2017/2018 கணக்காண்டுக்கான வணிகத்தின் தேறிய நட்டம் ரூ.200 000 ஆகும். ஆண்டுகாலத்தில் உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக முதலீடு, பற்றுக்கள் என்பன முறையே ரூ.400 000 ரூ.20000 எனில் 31.03.2017ல் உள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் பெறுமதி யாது?
   i. ரூ.2320 000
   ii. ரூ.2520 000
   iii. ரூ.3280 000
   iv. ரூ.1920 000
   v. ரூ.2920 000 (……)

**16 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளை எழுதுக.**

16. பின்வரும் சூழல் காரணிகள் ஒவ்வொன்றுக்குமான மாறிகள் ஒன்றைக் குறிப்பிடுக.

| **சூழல் காரணிகள்** | **மாறிகள்** |
|---|---|
| 01. பொருளாதார சூழல் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| 02. நுட்பம் மற்றும் தொழில்சார் சூழல் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| 03. சட்டச் சூழல் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| 04. சமூக கலாசார சூழல் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |

17. சொத்தொன்றின் பண்புகள் 3 குறிப்பிடுக.

01 _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

02 _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

03 _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

18. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.
   i. கணக்கு வைக்கும் போது அலகுசார் எண்ணக்கருவை பின்பற்றுதல் வேண்டும். (_ _ _ )
   ii. சொத்தொன்று மாற்றமடையும் போது கட்டாயம் உரிமை அல்லது பொறுப்பொன்று மாற்றமடைதல் வேண்டும். (_ _ _ )
   iii. உரிமையாளர் ஒருவருக்கு பல வணிகங்கள் உள்ள போது அவ் அனைத்து வணிகங்களுக்கும் ஒரே வணிகமாக கருதி கணக்கு வைத்தல் பொருத்தமானது. (_ _ _ )
   iv. ஆண்டுகாலத்தில் பற்றுக்களோ மேலதிக மூலதனமிடலோ மேற்கொள்ளப்படாத நிலையில் உரிமையாண்மையில் எழும் குறைவு நட்டமாகும். (_ _ _ )

19. வணிகமொன்று இலாபம் உழைப்பதற்கு காரணமாக அமைகின்ற பின்வரும் இரு துறைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
   i. வணிகத்தினுள் காசு உட்பாய்தல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
   ii. பொறுப்பு குறைவடைதல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

20. வணிகமொன்றின் செலவினத்திற்குரிய பின்வரும் இரு துறைகளுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
   i. வணிகத்தினுள் காசு வெளிப்பாய்தல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
   ii. பொறுப்பு அதிகரித்தல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

21. விதுர்ஷன் தனி வயாபாரத்தின் 31.03.2018ல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்தச்சொத்துக்கள் ரூ.1800 000ஆல் அதிகரித்ததுடன் பொறுப்புக்கள் ரூ.1200 000 ஆல் அதிகரித்தது. 2017/2018 கணக்காண்டுக்கான தேறிய நட்டம் ரூ.400 000 ஆகவும் மேலதிக மூலதனமிடல் ரூ.1600 000 ஆகவும் காணப்பட்டதெனில் ஆண்டுகாலத்திற்கான பற்றாக அமைவது?

   _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**22,23,24,25 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜெரோம் வணிகத்தில் 31.03.2018ல் முடிவுற்ற கணக்காண்டில் இடம்பெற்றவையாகும்.

01. உரிமையாளர் மேற்கொண்ட மேலதிக முதலீடு ரூ.800 000
02. கடனுக்கு வியாபார பொருள் கொள்வனவு ரூ.1000 000
03. கணகாண்டில் ரூ.300 000 கிரயமான இருப்புக்கள் முற்றாக அழிவடைந்தன.
04. கணக்காண்டுக்கான செயற்பாட்டு செலவுகள் ரூ.60 000 ஆண்டிருதி வரை செலுத்தப்படவில்லை.

22. பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்று மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் தாக்கத்தினைக் குறிக்கின்றது.

| விளைவு | கொடுக்கல் வாங்கல் இல |
|---|---|
| A. சொத்துக்களில் குறைவும் உரிமையான்மையில் குறைவும் | _ _ _ _ _ _ |
| B. பொறுப்புக்களில் அதிகரிப்பும் உரிமையான்மையில் குறைவும் | _ _ _ _ _ _ |
| C. சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையான்மையில் அதிகரிப்பும் | _ _ _ _ _ _ |
| D. சொத்துக்களில் அதிகரிப்பும் பொறுப்புக்களில் அதிகரிப்பும் | _ _ _ _ _ _ |

23. மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்களுக்குரிய மூலஆவணங்களை குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல் இல** | **மூலஆவணம்** |
|---|---|
| **01.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **02.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **03.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **04.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

24. மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்களுக்குரிய மூலஏடுகளை குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல் இல** | **மூலஏடு** |
|---|---|
| **01.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **02.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **03.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| **04.** | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |

25. மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களால் உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறியதாக்கம் யாது?

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

26. கீழே கணக்கீட்டுச் சமன்பாட்டில் தரப்பட்டுள்ள விடயங்களுக்கான பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களை விபரிக்க.

| | காசு + | சரக்கிருப்பு + | வருமதியாளர் + | ஆதனம் = | வங்கிக்கடன் + | உரிமை + | நிறு.வைத்தவருவாய் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | -10 | | | | -7 | | - 3 |
| 2. | + 10 | - 22 | + 15 | | | | + 3 |
| 3. | | | | – 2 | | | – 2 |
| 4. | | – 5 | | | | - 5 | |
| 5. | | | | | | + 8 | - 8 |
| 6. | | | | | | – 2 | + 2 |

01. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

02. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

03. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

04. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

05. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

06. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

27.) 01.01.2019 இல் ராஜன் வணிகத்தின் சொத்து பொறுப்புக்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு இருந்தன.

| சொத்து = | பொறுப்பு + | உரிமை |
|---|---|---|
| 120,000 | 20,000 | 100,000 |

தை மாத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

| திகதி | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 07.01.2019 | கடனுக்கு வாங்கிய பண்டங்கள் ரூபா 22,000 |
| 12.01.2019 | திருப்பியனுப்பிய பண்டம் ரூபா 2,000 |
| 15.01.2019 | ரூபா 15,000 கிரயமான பண்டம் 20% இலாபம் வைத்து கடனுக்கு விற்பனை |
| 18.01.2019 | கடனுக்கு விற்ற பண்டங்களில் 50% ஆன பண்டம் திரும்பக் கிடைக்க பெற்றது. |
| 20.01.2019 | வியாபார வருமதியாளரிடமிருந்து பெற்ற பணம் ரூபா 10,000 இதன் போது அவருக்கு வழங்கிய கழிவு ரூபா 500 |
| 25.01.2019 | உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூபா 30,000 வியாபார சென்மதியாளரின் மீதியினை தீர்த்துள்ளார். கடனை தீர்க்கையில் ரூபா 2,000 கழிவு கிடைக்கப் பெற்றுள்ளது. |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

மேலே தரப்பட்ட தரவுகளை அடிப்படையாக வைத்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக. மேலே தரப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டதன் பின்னர் சொத்து, பொறுப்பு, உரிமை ஆகியவற்றின் மீதிகளைக் கணிக்க.

சொத்துக்கள் : ரூபா ____________________________________

பொறுப்புக்கள் : ரூபா ____________________________________

உரிமை : ரூபா ____________________________________

(II) தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணிக்க

____________________________________

(III) தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவினைக் கணிக்க.

____________________________________

(28) கணக்கீட்டுச் சமன்பாட்டின் கூறுகள் எவை?

____________________________________________________

(29) அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைக் குறிப்பிடுக.

____________________________________________________

____________________________________________________

(30) உரிமைக்கும் பொறுப்புக்கும் இடையிலான ஒத்த தன்மை ஒன்றையும் வேறுபட்ட தன்மை ஒன்றையும் குறிப்பிடுக.

(I) ஒத்த தன்மை

____________________________________________________

____________________________________________________

(II) வேறுபட்ட தன்மை

____________________________________________________

____________________________________________________

## தேர்ச்சி – 03 இரட்டைப்பதிவு முறைக்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்வார்

### கணக்கு

கணக்கீட்டு அலகு ஒன்றில் ஏற்படும் நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியே கணக்கு எனப்படும்.

### இரட்டைப் பதிவு முறை

கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவானது வணிகத்தின் மீது இரு முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், அத்தாக்கத்தை ஒரே தடவையில் வரவு, செலவு என கணக்குகளில் பதிவு செய்யும் முறையே இரட்டைப் பதிவு முறை எனப்படும்.

இரட்டைப் பதிவு விதியானது கி.பி. 1494இல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பசியோலி ( Luca Pacioli) என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

### இரட்டைப் பதிவுத் தத்துவம்

அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் இரட்டை விளைவை கணக்குகளில் தாக்கல் செய்ய வேண்டிய முறையானது இரட்டைப் பதிவுத் தத்துவத்தின் மூலம் குறிப்பிடப்படுவதுடன் அவ்விரட்டை விளைவுகள் வரவு செலவு எனும் வகையில் ஒரே தடவையில் பதிவு செய்வதற்கு பின்பற்றப்படும் சட்டதிட்டங்களின் தொகுதி இரட்டைப் பதிவுத் தத்துவம் எனப்படும்.

### பேரேடு

கணக்குகள் அனைத்தும் பேணப்படும் இடம் பேரேடு எனப்படும். அது புத்தகமொன்றாகவோ, கோவையொன்றாகவோ, இலத்திரனியல் ஆவணமொன்றாகவோ, அட்டையொன்றாகவோ இருக்கலாம்.

**கணக்கு வகைகள் ஐந்து காணப்படுகின்றன. அவற்றின் அதிகரிப்பு குறைவினை பொழிப்பாக பின்வருமாறு காட்டலாம்.**

சொத்துக் கணக்கு, செலவுக் கணக்கு

| அதிகரிப்பு + | குறைதல் - |
|---|---|

பொறுப்பு, வருமானம் , உரிமை கணக்கு

| குறைதல் - | அதிகரிப்பு + |
|---|---|

01. பின்வரும் அட்டவணையிலுள்ள கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப்பதிவினை எழுதுக.

| | **கொடுக்கல் வாங்கல்** | **வரவுப் பதிவு** | **செலவுப் பதிவு** |
|---|---|---|---|
| 1. | காசு விற்பனை | காசு | விற்பனை |
| 2. | காசு கொள்வனவு | | |
| 3. | உட்திரும்பல் | | |
| 4. | வெளித்திரும்பல் | | |
| 5. | தளபாடம் கொள்வனவு | | |
| 6. | கொடுத்த கழிவு | | |
| 7. | பெற்ற கழிவு | | |
| 8. | அறவிடமுடியாத கடன் | | |
| 9. | தரகு வருமானம் பெறுவனவு | | |
| 10. | சம்பளக் கொடுப்பனவு | | |
| 11. | உரிமையாளர் பற்று | | |
| 12. | கடன் கொள்வனவு | | |
| 13. | கடன் விற்பனை | | |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 14. | மறுக்கப்பட்ட கடன்பட்டவரின் காசோலை | | |
| 15. | காகிதாதிகள் கொள்வனவு | | |
| 16. | தம்ரோ கம்பனியில் தளபாடம் கொள்வனவு | | |
| 17. | வங்கிக் கடன் தீர்ப்பனவு | | |
| 18. | வங்கிக் கடன்வட்டி செலுத்தியது | | |

**தேர்ச்சி – 4.0 முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளில் பதிவு செய்வார்**

## மூல ஆவணங்கள்

- கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குஅடிப்படை ஆவணமாகப் பயன்படும்.
- கொடுக்கல் வாங்கல்களை முழுமையான விபரங்களை அறியக்கூடியதாக இருக்கும்.
- வியாபார நிறுவனத்தில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்குரிய எழுத்து மூல ஆதாரமாக அமையும்.
- மூல ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள அதிகாரிகளுக்கு பொறுப்புக்களைச் சுமத்தமுடியுமாகவிருக்கும்.
- முதன்மை ஏட்டில் பதிவுகளை மேற்கொள்ளப் பயன்படும் ஆவணங்கள்

## முதன்மைப் பதிவேடுகள்

வியாபார நிறுவனத்தில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை மூல ஆவணங்களின் ஆதாரத்துடன் முதன் முதலில் கால ஒழுங்கில் பதிவுகளை மேற்கொள்ள உதவும் ஏடுகள் மூல ஏடுகள் ஆகும்.

- ஒத்த தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள் சுருக்கமாக்கப்பட்டு ஒரே புத்தகத்தில் பேணிச் செல்லப்படுவதன் காரணமாக பேரேட்டுக்கு தாக்கல் செய்வது இலகுவாகின்றது.
- மறதி மற்றும் விடுபடுதல் வழு குறைவடைகின்றது.
- கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்தும் போது ஏற்பட்ட வழுக்களை மிக விரைவாக வெளிப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
- வணிகக் கொடுக்கல் வாங்கல்களை சிறந்த கட்டுப்பாட்டுடன் நடத்திச் செல்ல முடிதல்.
- தனியான ஊழியர் குழுவொன்றினால் மூல ஏடுகள் பேணிச் செல்லப்படுவதனால் கணக்கீட்டுச் செயற்பாடுகள் இலகுவாகின்றது. (கணக்குப் பதிவில் தொழிற்பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி ஏற்படல்)
- வாடிக்கையாளர், வழங்குனர் போன்ற பிரிவினரிடையே நிறுவனம் தொடர்பான நம்பிக்கையை உறுதிப்படுத்தப்படல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

| முதன்மை ஏடுகள் | வரைவிலக்கணம் | இரட்டைப்பதிவுகள் |
|---|---|---|
| **காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு** | வணிகம் ஒன்றில் இடம்பெறும் காசு, காசோலை பெறுவனவுகளை முதன் முதலில் பதிவு செய்யும் ஏடு. | காசுக்கணக்கு வரவு<br>உரிய பெறுவனவுக/குசெலவு |
| **காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு** | வணிகம் ஒன்றில் இடம்பெறும் காசு, காசோலை (வங்கிக் கணக்கு மூலமான) கொடுப்பனவுகளை முதன் முதலில் பதிவு செய்யும் ஏடு. | உரியகொடுப்பனவுக/கு வரவு<br>காசுக்கணக்கு செலவு |
| **கொள்வனவு நாளேடு** | மீள் விற்பனைக்கான பண்டங்களின் கடன் கொள்வனவை பதியும் மூல ஏடு | கொள்வனவு க/கு வரவு<br>க/கொ கட்டுப்பாட்டுக் க/கு செலவு |
| **விற்பனை நாளேடு** | மீள் விற்பனைக்கான பண்டங்களின் கடன் விற்பனையை பதியும் மூல ஏடு | க/ப கட்டுப்பாட்டுக் க/கு வரவு<br>விற்பனை க/கு செலவு |
| **உட்திரும்பல் நாளேடு** | கடன்விற்பனைப் பண்டங்களை வாடிக்கையாளர் திருப்பி அனுப்புவதனை பதியும் மூல ஏடு | உட்திரும்பல் க/கு வரவு<br>க/ப கட்டுப்பாட்டுக் க/கு செலவு |
| **வெளித்திரும்பல் நாளேடு** | கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் வழங்குனருக்கு திருப்பி அனுப்புவதனை பதியும் மூல ஏடு | க/கொ கட்டுப்பாட்டு க/கு வரவு<br>வெளித்திரும்பல் க/கு செலவு |
| **பொதுக் குறிப்பேடு** | ஏனைய முதன்மை ஏடுகளில் பதிய முடியாத கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் மூல ஏடு | **பதியப்படும் விடயங்கள்**<br>1. பாவனைக்கு சொத்து கடன் கொள்வனவு<br>2. பாவித்த சொத்து கடன் விற்பனை<br>3. தொடக்கப்பதிவுகள்<br>4. மூடும் பதிவுகள்<br>5. வழுக்களை திருத்தும் பதிவுகள்<br>6. மாற்றீட்டு பதிவுகள்<br>7. சீராக்கல் பதிவுகள் |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

# மூல ஏடுகளும் அதற்கான மூல ஆவணங்களும்

| கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|
| **காசு,காசோலை பெறுவனவு** | பற்றுச்சீட்டு(Receipt) | காசுப்பெறுவனவு நாட்குறிப்பேடு |
| **காசு,காசேலை கொடுப்பனவு** | கொடுப்பனவு கைச்சாத்து(Voucher) | காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு |
| **சிறு செலவு** | சில்லறை காசுக்கொடுப்பனவு கைச்சாத்து/ உறுதிச்சீட்டு | சில்லறை காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு |
| **விற்பனைப் பண்டங்களின் கடன் கொள்வனவு** | கொள்வனவுப் பட்டியல்(Invoice) | கொள்வனவு நாட்குறிப்பேடு |
| **விற்பனைப் பண்டங்களின் கடன் விற்பனை** | விற்பனைப் பட்டியல் | விற்பனை நாட்குறிப்பேடு |
| **வியாபாரப் பொருட்களை திருப்பி அனுப்புதல்** | வரவுத்தாள் | வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு |
| **வியாபரப் பொருட்கள் உட்திரும்புதல்** | செலவுத்தாள் | உட்திரும்பல் நாட்குறிப்பேடு |
| **ஏனைய மூல ஏடுகளில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | நாட்குறிப்பு கைச்சாத்து | பொது நாட்குறிப்பேடு |
| **வைப்பிலிட்டு மறுத்தகாசோலை** | வங்கிக்கூற்று/காசோலை மறுப்புக்குறிப்பு | பொது நாட்குறிப்பேடு |
| **வங்கிக்கட்டணம் /வங்கி வட்டி** | வங்கிக்கூற்று | காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு |
| **கொடுத்த கழிவு** | பற்றுச்சீட்டு(Receipt) | காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு |
| **பெற்ற கழிவு** | கைச்சாத்து(Voucher) | காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு |

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

**காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு – பயிற்சிகள்**

01. கமால் வணிகத்தின் 2018 ஏப்ரல் மாத தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01.04.2018 | உரிமையாளர் மூலதனம் இட்டது | ப.சீ.இல 01 | 100000 |
| 03 | காசு விற்பனை | ப.சீ.இல 02 | 40000 |
